# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் 'A+'தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

## பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024

தொலைபேசி : 0431- 2407016/ 2407060
தொலை நகலி: 0431 - 2407444
முனைவர் பா. ஜெயபிரகாஷ், எம்.எல்.ஐ.எஸ்ஸி., எம்பில்., பிஎச்.டி., மின்னஞ்சல்: coe@bdu.ac.in
தேர்வு நெறியாளர் (பொ) வலைதளம் : www.bdu.ac.in

---

**ந.க. எண்: தே.நெ.அ. /இளநிலைப்பட்டம்/நவம்பர் 2024/தேர்வுகள் /2024 நாள்: 07.10.2024**

பெறுபவர்
முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** தேர்வுப் பிரிவு – நவம்பர் 2024 இளநிலை மாணவர்களுக்கான தேர்வுகள் பருவப் பாடக்குறியீடுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வு துவங்கும் நாள் அறிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:** துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 07.10.2024

- - -

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நவம்பர் 2024-க்கான இளநிலை தேர்வுகள் 18-11-2024 (திங்கள் கிழமை) அன்று துவங்கவும், பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் (தன்னாட்சி தவிர - Autonomous) இருந்து மாணாக்கர்களின் பருவப் பாடக்குறியீடுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான தகவல்களை தேர்வு இணையதள முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்யவும் மற்றும் உரிய நேரத்தில் தேர்வுகள் துவங்குவதற்கும் வரையறை செய்யப்பட்ட, வரைவுத் தேர்வுக் கால அட்டவணை கீழே பார்வைக்கு வைக்கப்படுகிறது. நடப்புப் பருவம் மற்றும் நிலுவைத் தாள்களுக்கான தேர்வு கட்டணத்துடன் பட்டியல்கள் மற்றும் விண்ணப்பங்கள் சமர்பிக்கப்பட வேண்டிய நாள் :

| வ. எண் | விவரங்கள் | | நாள் மற்றும் கிழமை |
|---|---|---|---|
| 1. | தேர்விற்குரிய விவரங்கள் மற்றும் கட்டணத்தை மாணாக்கர் களிடமிருந்து பெற்று பதிவேற்றம் செய்ய **கடைசி நாள்** | : | 15.10.2024 செவ்வாய்கிழமை |
| 2. | தேர்விற்குரிய விவரங்கள் மற்றும் கட்டணத்தை மாணாக்கர் களிடமிருந்து **தண்டத்தொகையுடன் (ரூ.300+18% GST)** பெற்று பதிவேற்றம் செய்ய **கடைசி நாள்** | : | 18.10.2024 வெள்ளிக்கிழமை |
| 3. | 18.10.2024-க்குப் பிறகு **கூடுதல் தண்டத்தொகை 500/- (ரூ.300+500=800+18% GST) உடன்** மாணாக்கர்களின் தேர்வுக் கட்டண விவரப்பட்டியல் வங்கி ரசீது மற்றும் வருகைப்பதிவு சான்றிதழுடன் **பதிவேற்றம் செய்திட கடைசி நாள்** | : | 22.10.2024 செவ்வாய்கிழமை |
| 4. | மாணாக்கர்களின் வருகைப்பதிவு தொடர்பான (Condonation) படிவங்கள், உரிய கட்டண விவரங்கள் மற்றும் அனைத்துவித படிவங்களையும் பல்கலைக்கழகத்திற்கு நேரில் சமர்பிக்க வேண்டிய நாள் | : | 25.10.2024 வெள்ளிக்கிழமை |
| 5. | **தேர்வு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியவர்கள்** | | |
| | 5.1 2020 – 2021ஆம் ஆண்டுகளில் சேர்க்கை பெற்று கல்லூரியை முடித்து, நிலுவைத் தாள்கள் உள்ளவர்கள் | | |
| 6. | **பதிவேற்றம் செய்ய வேண்டியவர்கள்** | | |
| | 6.1 மறுசேர்க்கை (Re-admission), மீளச்சேர்க்கை (Re-do) பெற்றுள்ளவர்கள் பதிவேற்றம் செய்யவும் | | |
| | 6.2 தொலைக்கல்வி மையம், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் பிற பல்கலைக் கழகங்களிலிருந்து மாற்றுச் சேர்க்கை **(Transfer admission)** பெற்றவர்கள் பதிவேற்றம் செய்யவும் | | |
| | **6.1 மற்றும் 6.2இல் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யும் பொழுது பதிவாளரின் அனுமதிக் கடிதம் மற்றும் கூடுதல் தாள்கள், மாற்றுத் தாள்கள் ஆகியவற்றின் கடித நகல்களுடன் மாணவர்களது செய்முறை மற்றும் எழுத்துத்தேர்வினற்கான அகமதிப்பெண்களையும் கண்டிப்பாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.** | | |
| 7. | **இளநிலைத் தேர்வுகள் துவங்கும் நாள்** | : | 18.11.2024 திங்கள்கிழமை |
| 8. | **அனைத்து எழுத்துத்தேர்வுகளுக்கான அகமதிபபெண்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள்** | | 15.11.2024 வெள்ளிக்கிழமை |

மாணாக்கர்களின் பெயர்கள் மற்றும் இதர தரவுகளில் நுழைவுச் சீட்டு (Hall Ticket), பருவத்தேர்விற்கான பதிவுப்பட்டியல் (Galley), தேர்வு முடிவுகள் (Result) ஆகியவற்றில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றை உடனடியாக சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களும் நடப்புப் பருவத் தேர்வு தாள்களுடன் "<u>நிலுவைத்தாள்களையும்</u>" எழுதக் கட்டாயம் பதிவு செய்திடல் வேண்டும்.**

அவ்வாறு நடப்புப் பருவத் தேர்வுக்குப் பதிவு செய்யத் தவறினால், அம்மாணவர்கள் அடுத்த பருவத் தேர்விற்கு பதிவு செய்ய இயலாத நிலை ஏற்படும். விடுபட்ட பருவத்தை மீளப் பயிலுதல் (Re-do) என்ற வகையில் ஆறு பருவங்களும் முடித்த பிறகு, படிக்க நேரிடும் என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில், முந்தைய பருவத் தேர்விற்குப் பதிவு செய்ய இயலாத மாணவர்கள் குறித்து, அடுத்து வரும் பருவத் தேர்விற்கு இணைய முகப்பில் (Exam Portal) பதிவுசெய்ய வேண்டுமெனில், பதிவாளர் அலுவலக "டி" பிரிவின் மூலம் கீழ்க்கண்ட இனத்திற்கு வழங்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. Re-do (மீளச்சேர்க்கை)
2. Re-Admission (மறுச்சேர்க்கை)
3. Transfer (மாற்றுச்சேர்க்கை)

**மேலும், தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்யப்படும் மாணாக்கர்களின் பாடக்குறியீட்டு விவரங்கள் மற்றும் கட்டண விவரங்களைப் பதிவிறக்கம் செய்து, அனைத்து இளநிலை (B.A., B.B.A., B.Com., B.Lit., and B.Sc) பாடவாரியாக இணையத்தில் பதிவேற்றப்படும் கட்டண விவரங்களின் (Form–I) கூட்டுத்தொகையுடன், வங்கியில் செலுத்தப்படும் கட்டணத்தொகையை நேர்செய்து சுருக்கப்பட்டியலுடன் (Abstract) பல்கலைக்கழக இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீது நகலையும் இணைத்து அனுப்பிவைக்க முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

இளநிலை மற்றும் முதுநிலை பருவத்தேர்விற்கான தேர்வுக்கட்டணங்களை தனித்தனியாக நுழைவாயிலில் (Gateway) செலுத்தப்பட வேண்டும். ஏனெனில் தணிக்கைத்துறை மற்றும் அரசாங்கத்திற்கு தேர்வு கட்டண விவரங்கள் தனித்தனியாக தெரிவிக்க வேண்டியுள்ளது. மேலும், தேர்வுக்கட்டணம் வங்கியின் மூலம் செலுத்தியபின் அந்த ரசீதினை (Challan) Scan செய்து பல்கலைக்கழக இணையமுகப்பில் (Portal) பதிவேற்றம் செய்யப்படவேண்டும். அவ்வாறு பதிவிடாத கல்லூரி மாணவர்களுக்கு தேர்வு நுழைவுச்சீட்டு (Hall Ticket) வழங்க இயலாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில் பயிலும் / தேர்வு எழுதும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு (Attendance) சதவீத விபரங்களை தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்ய முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். (Form – II, Form – III, Form – IV)

மேலும், வருகைப்பதிவு சதவீத குறைவுக் கட்டண (Condonation Fee) விவரங்களுடன் இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீதையும், தேவையானவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் நகலையும் தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்து அந்நகல்களுடன் வருகைப்பதிவுக் குறைவுடைய மாணாக்கர்கள் யாரும் இல்லாவிடில் **'வருகைப்பதிவுக் குறைவு இல்லை'** என்று துறைவாரியாக பட்டியலைத் தயார் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்க முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் அறிவுறுத்திலின்படி 2020 – 2021-ஆம் கல்வியாண்டிற்கு முன்னர் கல்லூரியில் பயின்று ஏதேனும் நிலுவைத்தாள்கள் இருப்பின் அம்மாணவர்கள் இத்தேர்விற்கு பதிவு செய்ய இயலாது என்பதையும் கல்லூரி முதல்வர்களுக்குத் தெரிவிக்கலாகிறது.**

**மேலும், மாற்றுத் திறனாளிகளுக்குத்** தேர்வு எழுதுவதற்கு உதவியாளர் (Scribe) நியமனம் செய்தல் மற்றும் பகுதி-2 (Part-II) ஆங்கிலம் மொழிப்பாடத்திற்கு விலக்குப் பெற்றுள்ள விவரங்களுடன், அம்மாணாக்கர்கள் குறித்த பட்டியலைத் **தனியே அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**மேலும், எக்காரணம் கொண்டும் இளநிலைப் பட்டத் (UG) தேர்வுக் கட்டணத்துடன் முதுநிலைப் பட்டத் (PG) தேர்வுக் கட்டணத்தைச் சேர்த்துச் செலுத்தக்கூடாது என தெரிவிக்கலாம்**

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

**தேர்வு நெறியாளர்**

**__இணைப்பு:__** Forms I மற்றும் சரிபார்ப்புப் பட்டியல்

**__நகல்__**: 1. மந்தனப் பிரிவு-1, மந்தனப் பிரிவு-2, கணினிப் பிரிவு. கணக்குப்பிரிவு

2. இயக்குநர் (பொ), தகவல் தொழில்நுட்ப மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024